தி.மு.க. இளைஞர் அணி

முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்த நாள் & திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனை விளக்க தெருமுனைக் கூட்டங்கள்!

காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ் அறிவிப்பு!

கழக இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படியும், கழக இளைஞர் அணிச் செயலாளர் மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முரசொலியில் வெளியிட்ட அறிவிப்பின்படியும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102–வது பிறந்த நாளை முன்னிட்டு, தமிழர் நலன் காத்த அவரின் புகழ் பரப்பும் வகையிலும், கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனைகளை விளக்கியும், கழகப் பேச்சாளர்கள் மற்றும் இளம் பேச்சாளர்களைக் கொண்டு தெருமுனைக் கூட்டங்கள் நடைபெற்று வருகின்றன. காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் ஏற்கனவே அறிவிக்கப்பட்ட இடங்களோடு சேர்த்து கீழ்க்கண்ட இடங்களிலும் தெருமுனைக் கூட்டங்கள் நடைபெறும் :–

வ. எண்	நாள்	ஒன்றியம் / நகரம் / பகுதி / பேரூர்	இடம்	பேச்சாளர்கள்
1	12.07.2025	பம்மல் தெற்குப் பகுதி	நல்லதம்பி சாலை, பம்மல்.	முகலிவாக்கம் தங்கம் மா.பூபதி
2	13.07.2025	பல்லாவரம் வடக்குப் பகுதி	கோவளம் தெரு, பழைய பல்லாவரம்.	நாத்திகம் நாகராஜன் தே.சிலம்பரசன்
3	13.07.2025	பல்லாவரம் தெற்குப் பகுதி	அனுமார் கோவில் தெரு, ராதா நகர்.	நாத்திகம் நாகராஜன் தே.சிலம்பரசன்.
4	14.07.2025	செம்பாக்கம் வடக்குப் பகுதி	சிதம்பரம் தெரு, பாரதிபுரம்.	ஆலந்தூர் மலர் மன்னன் தாம்பரம் ஏகாம்பரம்
5	14.07.2025	செம்பாக்கம் தெற்குப் பகுதி	காமராஜர் பிரதான சாலை	ஆலந்தூர் மலர் மன்னன் தாம்பரம் ஏகாம்பரம்
6	15.07.2025	தாம்பரம் கிழக்குப் பகுதி	அம்பேத்கர் நகர் சந்திப்பு, அகரம் பிரதான சாலை.	ஒப்பிலா மணி பம்மல் தினேஷ்
7	15.07.2025	தாம்பரம் மேற்குப் பகுதி	எம்.ஜி.ஆர். சாலை, ஆனந்தபுரம்.	ஒப்பிலா மணி பம்மல் தினேஷ்
8	16.07.2025	பெருங்களத்தூர் வடக்குப் பகுதி	காந்தி சாலை, மேற்கு தாம்பரம்.	செங்கை தாமஸ் இரா.ரிஷி சந்தோஷ்
9	16.07.2025	பெருங்களத்தூர் தெற்குப் பகுதி	வார்டு–59, காமராஜர் நகர்.	செங்கை தாமஸ் இரா.ரிஷி சந்தோஷ்

காஞ்சிபுரம்

நாள் : 26.06.2025

கலைஞர் 100 1924 - 2023

சென்னை தென்மேற்கு மாவட்ட திமுக வழக்கறிஞர் அணி சார்பில் சட்டமன்ற பொது தேர்தல் சார்ந்த பயிற்சி பாசறை கூட்டம் சென்னை தென்மேற்கு மாவட்ட செயளாளார் மயிலை த. வேலு எம்.எல்.ஏ. தலைமையில், கழக சட்டத்துறை செயலாளர் என்.ஆர். இளங்கோ.எம்.பி. கலந்து கொண்டு ஆலோசனை வழங்கினார்கள். இதில் ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ. , பகுதிச்செயலாளர்கள், எஸ்.முரளி, நந்தனம் மதி, கே.ஏழுமலை, மற்றும் சட்டத்துறை இணைச் செயலாளர்கள், துணை செயலாளர்கள், மயிலாப்பூர், தியாகராய நகர் வட்டகழக செயலாளர்கள், தலைமை கழக வழக்கறிஞர்கள், ஆகியோர்கள் கலந்து கொண்டார்கள். இக் கூட்டத்தினை மாவட்ட வழக்கறிஞர் அணியின் அமைப்பாளர் சி.கணேஷ் பாண்டியன் ஏற்பாடு செய்திருந்தார்.

தலைமை : என்.சந்திரன் ! ப.குணாளன் முன்னிலை! சூர்யா கிருஷ்ணமூர்த்தி – ஈரோடு இறைவன் சிறப்புரை!

ஆலந்தூர் தெற்கு பகுதி சார்பில் தெருமுனை கூட்டம்!

டி.ஆர்.பாலு எம்.பி. – அமைச்சர் தா.மோ. அன்பரசன் – ஆர்.எஸ். பாரதி பங்கேற்பு!

சென்னை,ஜூன்.27- காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் ஆலந்தூர் தெற்கு பகுதி திமுக சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் பிறந்த நாளை முன்னிட்டு மாபெரும் திருமலை கூட்டம் பகுதி செயலாளர் மண்டல குழு தலைவர் என்.சந்திரன் தலைமையில் நாளை 28.06.2025 சனிக்கிழமை மாலை 5 மணிக்கு 50 அடி சாலை பீ.வி. நகர், நங்கநல்லூரில் நடைபெறுகிறது.

பகுதி செயலாளர் ப. குணாளன் முன்னிலை வகிக்கிறார். ஆலந்தூர் தெற்குப் பருதி நிர்வாகிகள் ஜி.சுந்தர் ராஜன், ஆர்.பாபு, ஏ.சாலமோன், கே.ராஜேஸ்வரி சத்யா, இ.ரமேஷ் ஆகியோர் வரவேற்கின்றனர்.

இதில் மாவட்ட செயலாளர் - அமைச்சர் தா.மோ. அன்பரசன் சூரியகிருஷ்ண மூர்த்தி, ஈரேடுஇறைவன் ஆகியோர் சிறப்புரை ஆற்றுகின்றனர். இதில் டி. ஆர். பாலு எம்.பி., கழக அமைப்புச் செயலாளர் ஆர். எஸ் பாரதி, பத்மபிரியா, பிடிசி ஜி.செல்வராஜ், எம்.எஸ். கே.இப்ராகிம், ஆர்.டி.பூபாலன், இரா.பாஸ்கரன், கீதா ஆனந்தன் கோல்டு டி.பிரகாஷ், பி.சாய் ஜெய்காந்த், ஆர்.ஆர்.ஜெயராம் மார்த்தாண்டன், கே.ஆர்.ஆனந்தன், வே.டில்லிபாபு கோ. கோட்டீஸ்வரன், ஐ.அழகேசன், எஸ்.ஜெயா, எம்.சையத் அபுதாகீர், ஆலந்தூர் தெற்கு - வடக்கு பகுதி வட்ட கழக செயலாளர்கள்: ஜெ.நடராஜன், டி.ஜேசுதாஸ், கே.ஆர். ஜெகதீஸ்வரன், ஏ.வேலவன், ஏ.ஆர்.சரவணா, ஜெ.செல்வேந்திரன், டி.ரவி, ம. கோ.கருணாநிதி, ப.கிருஷ்ணமூர்த்தி, கே.பி.முரளிகிருஷ்ணன், எம்.ஆர்.சீனிவாசன், ஆலந்தூர் தெற்கு - வடக்கு பகுதி மாவட்ட பிரதிநிதிகள் டி.ஜெயக்குமார், பி.செல்வம், மூ.வெள்ளைச்சா மி, ஜி.வீரராகவன், கோ.பிரபாகரன், என்.பெருமாள், அபிஷேக்கிருஷ்ணா, பி.வேல்மு ருகன், வி.ரமணா (எ) வெங்கட்ரமணன், கே.வெற்றி வேல், பி.திருமாறன், கே.பாபுகுமார், ஜி.ஆர். வெங்கடேசன், ச.பூவராகவன், த.மனோகரன், மு. முனியாண்டி இரா.குணசேகரன் அ.குப்புசாமி இரா. கீர்த்திராஜ் ம.சத்யா உள்ளிட்ட அனைத்து அணிகளின் நிர்வாகிகள் அனைவரும் பங்கேற்கின்றனர்.

வட்டச் செயலாளர் இ. உலகநாதன் நன்றி கூறுகிறார்.

மயிலை மேற்குப் பகுதி தகவல் தொழில்நுட்ப அணி கூட்டம்!

நந்தனம் கி.மதி தலைமை! சி.எச்.சேகர் – கோ.வி. லெனின் பங்கேற்பு!

சென்னை, ஜூன் 27- மயிலை மேற்கு பகுதி செயலாளர் நந்தனம் மதி எம்.சி. தலைமையில் ஜி.ஆர். ராஜேந்திரன், அசோக் குமார், பா.பாக்கியதாஸ், ஜி. முருகையன், வட்டச் செயலாளர்கள் டி.ராஜவேலு, சி.கிருஷ்ணமூர்த்தி, எஸ்.ஆர். ராஜா, சுரேஷ் குமார், அ.நாகராஜன், மு.இ.ஏழுமலை, மூ.ராஜேந்திரன் வரவேற்பில் தகவல் தொழில்நுட்ப அணி மாவட்ட அமைப்பாளர் ரா.கதிரவன் , தொகுதி அமைப்பாளர் வி.கார்த்திக் , மயிலை மேற்கு பகுதி அமைப்பாளர் தி.லோகே ஸ்வரன் ஆகியோர் முன்னிலையில் மயிலை மேற்குப் பகுதி தகவல் தொழில்நுட்ப அணி ஆலோசனைக் கூட்டம் நாளை (28.06.2025 சனிக்கிழமை) மாலை 5.30 மணியளவில் பாரதிதாசன் சாலையில் உள்ள சமூக நலக்கூடம் தேனாம்பேட்டையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்திற்கு தகவல் தொழில்நுட்ப அணி வட்ட அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள், தகவல் தொழில்நுட்ப அணி,பாக முகவர்கள் (BLA2), ஒவ்வொரு பாகதிற்குட்பட்ட தகவல் தொழில்நுட்ப பாக உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும் என கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இக்கூட்டத்தில் மயிலை தொகுதி பொறுப்பாளர் கோ.வி.லெனின், மண்டல பொறுப்பாளர் சி.எச். சேகர் ஆகியோர் பங்கேற்று ஆலோசனை வழங்குகிறார்கள்.

காஞ்சி தெற்கு மாவட்டம் அச்சரப்பாக்கம் வடக்கு ஒன்றிய திமுக இளைஞர் அணி சார்பில் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் விழா மற்றும் திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனை விளக்க பொதுக்கூட்டம் ஒன்றிய கழக செயலாளர் ஜீ. தம்பு தலைமையில் நடைபெற்றது. இதில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் யுவராஜ், தலைமை கழக பேச்சாளர்கள் பவானி கண்ணன், பேரரசன், யுவராஜ், ஆண்டோ சிரில்ராஜ் திமுக அரசின் சாதனைகளை எடுத்துக் கூறினர். இந்த நிகழ்ச்சியில் நாராயணன், சிவபெருமான், சரத்குமார், சிலம்பரசன், ராஜாராம், தங்கராஜ், ராதாகிருஷ்ணன், குமரேசன், மாரியப்பன், ஏழுமலை, சந்திரசேகர், மணி, தேவேந்திரன், ஹரி கிருஷ்ணன் வேணுகோபால் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

திருவள்ளூர் மாவட்டம், கும்முடிப்பூண்டி தொகுதி. கும்மிடிப்பூண்டி மேற்கு ஒன்றியம் கண்ணம்பாக்கம் மற்றும் கும்புளி ஊராட்சி ஒன்றிய துவக்க பள்ளிகளில் முன்னாள் மாவட்ட செயலாளரும், தலைமை செயற்குழு உறுப்பினரும். கும்முடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி ஜெ கோவிந்தராஜன் அவர்கள் பள்ளி மாணவ மாணவியர்கள் வருகை பதிவேடு ஆசிரியர் வருகை பதிவேடு பள்ளி அடிப்படை வசதிகள் குறித்து ஆய்வு செய்தார் உடன் மு மணிபாலன், எம்.எல்.ரவி கே.வி.நாகராஜ் கே.என்.பழனி நாகராஜ், தேவன் கணபதி உள்ளிட்டோர் உடன் இருந்தனர்

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

அலமேலு அப்பாதுரை

ஜூன் 27 (2001)

தி.மு.க. மகளிர் அணிச் செயலாளராகவும் – தலைமை நிலையச் செயலாளராகவும் – தமிழக சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும் – சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினராகவும் பணியாற்றியவர்.

தி.மு.க. மகளிர் அணியினைச் சிறப்பாக கட்டிக் காப்பாற்றியவர்.

1938ஆம் ஆண்டு நடைபெற்ற இந்தி திணிப்பு எதிர்ப்பு கிளர்ச்சியிலும், பின்னர் நடைபெற்ற கறுப்புக் கொடி போராட்டம், விலைவாசி உயர்வு போராட்டம் உள்ளிட்ட பல்வேறு அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

இன்று (27 - 6 - 2025)

அனைத்து சார்பதிவாளர் அலுவலகங்களிலும் கூடுதல் முன்பதிவு வில்லைகள் ஒதுக்கீடு!

பத்திரப் பதிவுத் துறை அறிவிப்பு!

சென்னை, ஜூன் 27- சுபமுகூர்த்த தினங்கள் என கருதப்படும் நாட்களில் அதிகளவில் ஆவணப் பதிவுகள் நடைபெறும் என்பதால் அன்றைய தினங்களில் பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று ஆவணப்பதிவுக்காக கூடுதல் முன்பதிவு வில்லைகள் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

தற்போது ஆனி மாதத்தில் வரும் சுபமுகூர்த்த தினமான 27.06.2025 அன்று அதிகளவில் பத்திரப் பதிவுகள் நிகழும் என்பதால் கூடுதலாக முன்பதிவு வில்லைகள் ஒதுக்கீடு செய்யுமாறு பல்வேறு தரப்பு பொதுமக்களிடமிருந்து கோரிக்கைகள் பெறப்பட்டுள்ளன.

எனவே, ஆனி மாதத்தில் வரும் சுபமுகூர்த்த தினமான இன்று 27.06.2025 ஒரு சார்பதிவாளர் உள்ள அலுவலகங்களுக்கு 100க்கு பதிலாக 150 முன்பதிவு வில்லைகளும், இரண்டு சார்பதிவாளர்கள் உள்ள அலுவலகங்களுக்கு 200க்கு பதிலாக 300 முன்பதிவு வில்லைகளும் அதிகளவில் ஆவணப் பதிவுகள் நடைபெறும் 100 அலுவலகங்களுக்கு 100க்கு பதிலாக 150 சாதாரண முன்பதிவு வில்லை களோடு ஏற்கெனவே வழங்கப்படும் 12 தட்கல் முன்பதிவு வில்லைகள் கூடுதலாக 4 தட்கல் முன்பதிவு வில்லைகளும் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக வழங்கிட உத்தரவிடப்பட்டுள்ளது.

போளூர் முரசொலி முகவர்

சீனிவாசனின் சகோதரர் ந.ரமேஷ் மறைவு!

திருவண்ணாமலை, ஜூன் 27- திருவண்ணாமலை மாவட்டம் போளூர் வட்டம் வெண்மணி "வான் வாழ்" நடராஜன் காந்திமதி ஆகியோரின் மூத்த மகனும் க.அபிராமிசெல்வி அவர்களின் கணவரும், போளூர் முரசொலி முகவர் ந.சீனிவாசனின் சகோதரரமான ந.ரமேஷ் (தினகரன் செய்தியாளர்) நேற்று முன் தினம் (25.6. 2025) இரவு 11.00 மணியளவில்

இயற்கை எய்தினார். அன்னாரின் இறுதிச்சடங்கு நேற்று (26.06.2025) மாலை 4.00 மணி அளவில் வெண்மணியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்றது.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார்

ஜூன் 27 (1962)

திராவிட இயக்க வரலாற்றில் 1938ல் நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டம் ஒருமைல் கல்லாகும். இந்தப் போராட்டத்தில் திருச்சி, உறையூர் முதல் சென்னை வரை 42 நாட்கள் இந்தி எதிர்ப்பு பேரணி நடைபெற்றது. இப்பேரணியில் 577 மைல்கள் நடந்தே வந்தவர் இவர். 87 பொதுக் கூட்டங்களில் உரையாற்றியுள்ளார்.

மேலும், சென்னையில் பள்ளி முன் இந்தி திணிப்பை எதிர்த்து, மறியல் செய்து கைது செய்யப்பட்டு ஆறு மாதங்கள் வேலூர் சிறையில் இருந்தார்.

இவரின் 50 ஆண்டுகால பொது வாழ்க்கைக்கு அவர் வாழும்போதே பெற்ற ஒரே அங்கீகாரம் தி.மு.க. சார்பில் அண்ணா வழங்கிய விருதுதான். சுயமரியாதை இயக்கத்திற்காக உழைத்தவர்களுக்கு தி.மு.க. சார்பில் விருது வழங்கி சிறப்பிக்க அண்ணா முடிவு செய்தார். இதற்கு இவருடைய பெயரைத்தான் அண்ணா முதன்முதலில் தேர்வு செய்தார்.

தலைவர் கலைஞர் அவர்கள் 1989ஆம் ஆண்டு மூன்றாவது முறையாக தமிழக முதல்வராக பொறுப்பேற்றபோது, முதல்முறையாக ஏழைப்பெண்கள் திருமண உதவித் திட்டத்தை தொடங்கி வைத்து அதற்கு "மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண உதவித் திட்டம்" என்று இவரது பெயரை வைத்து, தொடர்ந்து செயல்படுத்தினார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.